அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 24/2017 (I)

எனது இலக்கம் : R/9/2/2017
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு - 07

2017 நவம்பர் மாதம் 30 ஆந் திகதி

அமைச்சின் செயலாளர்களுக்கு,
மாவட்ட செயலாளர் / அரசாங்க அதிபர்களுக்கு,
திணைக்களத் தலைவர்களுக்கு,

**திறமையின் அடிப்படையில் அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையில் அதிசிறப்பு தரத்திற்கு தரமுயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சை – 2017**

மேற்படி பரீட்சைக்கு ஏற்புடையதாக அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 24/2017 இல் பந்தி 3 இல், முதலாவது பிரிவின் 6 (இ) பந்தியில் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி மற்றும் 7(இ) பந்தி பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

I. பந்தி 3 இல் முதலாவது பிரிவு மட்டும் பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

அதிசிறப்பு தரத்தின் வெற்றிடங்களில் 50% அளவினை உரித்துடைய நியமனங்கள் திறமையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதுடன், அதன் பிரகாரம் நிரப்பப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை 143 ஆகும்.

II. 6 (இ) பந்தியில் விண்ணப்பங்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2017.12.31 வரை நீடிக்கப்படுகின்றது. அதன்படி விண்ணப்பத்தாரிகள் 2017.12.31 ஆந் திகதியில் எல்லாத் தகைமைகளையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

III. 7(இ) பந்தி பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

விண்ணப்பத்தாரிகளுக்கு அனுமதி அட்டை அனுப்பியவுடன் பரீட்சைகள் திணைக்களத்தினால் அது தொடர்பாக குறிப்பிட்டு பத்திரிக்கைகளில் அறிவிப்பொன்று வெளியிடப்படும். அத்தகைய அறிவிப்பொன்று வெளியாகி 2 நாட்கள் அல்லது 3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக பரீட்சைகள் திணைக்களத்தின் ஒழுங்குபடுத்தல் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளைக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். உங்களிடமுள்ள விண்ணப்பப் படிவத்தின் பிரதி, பரீட்சையின் பெயர், உங்களது முழுப் பெயர் மற்றும் முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகிய விபரங்களை குறிப்பிட்டு இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திடம் விசாரிக்க வேண்டுமென அறியத்தருவதுடன், கொழும்புக்கு வெளியேயுள்ள விண்ணப்பத்தாரிகளாயின் உங்களது மேற்படி விபரங்கள் மற்றும் அனுமதி அட்டையின் பிரதியினை தொலைநகல் (பெக்ஸ்) மூலம் உங்களிடம் அனுப்பிவைப்பதற்கு ஏதுவாக உங்களது தொலைநகல் (பெக்ஸ்) இலக்கம் குறிப்பிடப்பட்ட கோரிக்கைக் கடிதம் என்பன தொலைநகல் ஊடாக இலங்கை பரீட்சை திணைக்களத்திடம் அனுப்பி விசாரித்தல் பயனளிக்கக் கூடியதாக இருக்கும்.

IV. இந்த பரீட்சையின் பொருட்டு தற்போதும் விண்ணப்பித்துள்ள விண்ணப்பத்தாரிகள் மீண்டும் விண்ணப்பங்கள் அனுப்புவதை தவிர்க்கும்படி அறியத்தருகின்றேன்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளை பிரகாரம்,

ஜே.ஜே.ரத்னசிரி
செயலாளர்
அரசாங்க நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சு